ஜெயம்கொண்டத்திற்கு முன்சீப் கோர்ட்

* 221 வினு—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங் கொண்டம் நகரத்தில் ஜில்லா முன்சீப் கோர்ட் ஒன்று ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவினர் அங்கு வந்து விசாரித்தபொழுது, பொதுமக்களும் மற்ற அரசியல் தலைவர்களும் அது அவசிய மானது என்று எடுத்துக்கூறி இருப்பதால், அதைக் கொண்டு வருவதற்கு இனி யாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றம் அந்த கோரிக்கையைப் பரிசிலித்து, பரிந்துரை செய்யுமாறுல் கவனிக்கலாம்.

கழிவுநீர்க் குழாய்கள் தயாரிப்பு

* 222 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

பெரம்பலூர் லால்குடி வட்டங்களில் கிடைக்கும் களிமண்ணை வெட்டி எடுத்து கழிவு நீர்க் குழாய்கள் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பெரம்பலூர் வட்டத் திலும், லால்குடி வட்டத்திலும் நிறைய களிமண் கிடைக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியில் குழாய் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை துவங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தின் சார்பிலே இப்பொழுது திட்டம் இல்லை.